## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - 2015

---

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகளை தீர்க்கும் செலவினம் நிதிச் செயலாற்றல் கூற்றில் தனியாக வெளிப்படுத்த வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் அலுவலரொருவருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 162,610 இழப்பீட்டுப் பணம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களாக கருதப்படுகின்ற விவசாய பீடத்திற்குச் சொந்தமான கால்நடை இருப்பின் பெறுமதியை நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது கால்நடைகள் கொள்வனவு செய்யப்பட்ட கிரயத்தில் வருடாந்தம் 20 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு தேறிய பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய பீடத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ஆரம்பவேலை முற்பணம் மற்றும் பல்கலைக்கழகத்தின் நீச்சல் தடாகத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ஆரம்பவேலை முற்பண மீதி என்பன பேரேட்டின் பிரகாரம் முறையே ரூபா 10,340,982 மற்றும் ரூபா 29,060,008 ஆக இருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 8,132,028 மற்றும் ரூபா 24,579,116 எனக் காண்பிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களின் சமப்படுத்தல் தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் விவசாய பீடத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 100,000 பெறுமதியான 200 கோழிக் குஞ்சுகளினதும் ஆண்டின் போது பிறந்த 07 பசுக்கன்றுகளினதும், 04 ஆட்டுக் குட்டிகளினதும், 01 செம்மறி ஆட்டினதும் ஒட்டுமொத்தமாக 12 உயிரினங்களினதும் பெறுமதி கணிப்பிடப்பட்டு மொத்தப் பெறுமதியும் கால்நடை இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரமான இருப்பு மீதிக்கும் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற இருப்பு மீதிக்கும் இடையே ரூபா 715,573 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) கணனிமயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 11 நிலையான சொத்து விடயங்களுக்கும் இடையே ரூபா 1,204,507,511 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) நூலகப் புத்தகங்கள் தொடர்பாக 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்விற்குரிய அறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளின் பிரகாரம் ரூபா 18,561,114 தொகையான நூலகப் புக்கதங்கள் மற்றும் வார சஞ்சிகைகளின் பௌதீக இருப்பை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) விவசாய பீடத்திற்குரிய பண்ணையில் ரூபா 38,850 பெறுமதியான பல்வேறு வகைகளுக்குரிய 38 விலங்குகள் மீளாய்வாண்டின் போது இறந்திருந்ததுடன் அது தொடர்பான மிருக வைத்திய அறிக்கை அல்லது உரிய ஏனைய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி முற்பணமாக அறவிடப்பட வேண்டிய காலத்தை விஞ்சி 03 மாதங்கள் முதல் 32 மாதங்கள் வரையிலான காலம் கடந்திருந்த ரூபா 1,014,565 கூட்டுத்தொகையான 10 மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நீர் செயற்திட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 388,003 தொகை மற்றும் பிரதான நிர்வாகக் கட்டிடத்தின் மலசலகூட முறைமையை நவீன மயப்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 487,485 தொகையான ஆரம்பவேலை முற்பணம் என்பவற்றை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 381(1) | திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் பல்கலைக்கழகத்தால் வங்கி நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 570 | 2 வருடங்கள் முதல் 8 வருடங்கள் வரையான காலம் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 7,022,040 ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு உரித்தான மூன்று உத்தியோகத்தர்களினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி பெறப்பட்டிருந்த ரூபா 330,426 பெறுமதியான 2,512 லீற்றர் எரிபொருள் தொடர்பாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரிச் சுற்றறிக்கை ஏற்பாடுகள் அல்லது அமைச்சுச் செயலாளரின் சிபாரிசுகள் மற்றும் திறைசேரி இணக்கப்பாடின்றி கல்விசார் பதவியணியினரை வைத்திருக்கும் படியாக மருத்துவ பீடத்தின் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் பயிலுனர் விரிவுரையாளர்களுக்கு முறையே மாதாந்தம் ரூபா 100,000 தொகை, ரூபா 80,000 மற்றும் ரூபா 50,000 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 20,142,386 தொகையும், முன்னைய ஆண்டிற்காக ரூபா 4,782,500 தொகையும் ஆக ரூபா 24,924,886 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடமை பிரமாணம் செய்கின்ற உத்தியோகத்தரொருவருக்கு நாளாந்த இணைந்த படிகளுக்கு மேலதிகமாக பிரயாண துாரத்தை அடிப்படையாகக் கொண்டு நாளொன்றிற்கு ரூபா 500 முதல் ரூபா 1,500 வரை பிரயாணப்படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 191,600 கூட்டுத்தொகையானது நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 116,769,950 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,645,369 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 121,415,319 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஊழியர் ஊதியச் செலவினம் ரூபா 174,939,261 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை நிதிசார் விளைவுகளின் பற்றாக்குறை படிப்படியாகக் குறைவடைந்து 2014 ஆம் ஆண்டின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், மீண்டும் 2015 ஆம் ஆண்டின் போது பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2614 சதவீத வீழ்ச்சியாகும். எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 332,295,581 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 932,609,548 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 46(5) ஆம் பிரிவின் பிரகாரம் பல்லைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்கள் தொடர்பாகவும் கற்கை செயல் முன்னேற்றம் செனற் சபையினால் பரீட்சிக்கப்பட்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள், செனற் சபைக்கூட அறிக்கையை பரீட்சித்த போது உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் கல்விசார் செயலாற்றல் அறிக்கை ஒவ்வொரு பீடத்தினாலோ அல்லது திணைக்களத்தினாலோ பீடங்களின் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கல்விசார் பதவியணியினருக்காக கற்கை நடவடிக்கைகள் தொடர்பான கொடுப்பனவு முறைமையின் (Loads of practices on academic accountability for academic staff in Sri Lanka University – System) கீழ் நிறைவேற்ற வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவின் பிரகாரம் (work norms) ஒவ்வொரு விரிவுரையாளரினாலும் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட வேண்டிய மாணவர் தொடர்பின் மணித்தியால அளவு உள்ளபடியான நேரசூசி மூலம் வெளிப்படுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட முகாமைத்துவ பீடத்தின் 14 விரிவுரையாளர்களினால் வெளிப்படுத்தப்பட வேண்டிய 5,275 விரிவரை மணித்தியாலங்களில் 2,882 விரிவுரை மணித்தியாலங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 34 ஆராய்ச்சிகளுக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு ரூபா 6,353,213 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 9 ஆராய்ச்சிகளின் அரையாண்டு உள்ளக ஆராய்ச்சி அறிக்கையை உள்ளடக்கி செயல்முன்னேற்ற அறிக்கைகள் ஆராய்ச்சிக்

குழுவிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஆராய்ச்சி கால எல்லை முடிவடைந்த 19 ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 26 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 5,436,700 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு ஆராய்ச்சி நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமையின் காரணமாக ஏனைய முன்னுரிமை வழங்க வேண்டிய ஆராச்சிகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்குவதற்கிருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

(உ) மாதாந்த சம்பளத்துடன் ரூபா 4,915,743 தொகையான ஆராய்ச்சிப் படிகளைப் பெற்ற கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரில் 155 பேர்களினால் ஆராய்ச்சி முன்னேற்றத்தை உள்ளடக்கிய இடைத்தர இறுதி ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முகாமைத்துவ பீடத்தில் இறுதி வருட பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் முறையே 23 சதவீதம் மற்றும் 21 சதவீதமான மாணவர்கள் சித்தியடையாமை மற்றும் பீடத்தில் முதலாம் தர சித்தியுடன் சித்திபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த 03 வருடங்களிலும் ஒரு மாணவராக மாத்திரம் இருந்த காரணத்தால் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்ய வேண்டியதன் அவசியமொன்று அவதானிக்கப்பட்டது.

(எ) பிரயோக விஞ்ஞான பீடத்தில் 03 பாடநெறிகளில் மீளாய்வாண்டில் நடைபெற்ற இறுதி வருட பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 06 மாதம் முதல் 10 மாதம் வரையிலான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் 2 வருடமும் 9 மாதங்களும் ஆன காலத்தில் பட்டப்பின்படிப்பினை பின்பற்றுவதற்காக வெளிநாடு செல்வதற்கு பல்கலைக்கழகத்துடன் ரூபா 2,250,000 தொகையான பிணைமுறியில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அந்த விரிவுரையாளர் உரிய பாடநெறியைப் பூர்த்தி செய்யாமல் மீண்டும் நாட்டிற்கு வருகை தந்து சேவைக்கு அறிக்கையிடப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் பட்டப்பின்படிப்பினை பின்பற்றுவதற்கும் வெளிநாடு செல்வதற்கு பெறப்பட்ட பணத்தில் செலவிடப்பட்ட ரூபா 651,338 தொகையை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவருக்காக 03 வருடங்கள் வெளிநாட்டு பட்டப்பின்படிப்பு பாடநெறியைப் பின்பற்றுவதற்காக ரூபா 4,116,719 பெறுமதியில் 2011 யூன் 01 ஆந் திகதி பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி சேவைக்கு அறிக்கையிட வேண்டிய போதிலும் அவரால் சேவைக்கு அறிக்கையிடாமையினால் அத்திகதியில் உள்ளவாறு சேவையைக் கைவிட்டுச் சென்றதாகக் கருதப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் உடன்படிக்கையை மீறியதால் ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) விவசாய பீடத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளுக்காக 15 ஏக்கர் அளவிலான காணியொன்றைக் கைப்பற்றுவதற்காக 2011 ஆம் ஆண்டின் மத்திய நுவகரம்பளாத்த பிரதேச செயலாளருக்கு ரூபா 7,200,000 தொகையொன்று வைப்புச்

செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய சுவீகரிப்பு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள 40 பொலிஸ் வீடுகளையும் அந்த காணியையும் பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்காக பொதுத்திறைசேரியினால் ரூபா 18 மில்லியன் 2006 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் காணியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

மாணவர் விடுதிகளுக்கு பவுசர் மூலம் நீர் வழங்குவதற்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் மேலதிக 28 இன் 2.14.1 இற்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்து கூறுவிலை கோராமல் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் சமர்ப்பித்த கூறுவிலையின் அடிப்படையில் பவுசர் மூலம் நீர் வழங்கும் சேவை அவருக்குக் கையளிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 6,720,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பவுசர்களின் உரித்து கேள்விதாரருக்கு சொந்தமாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட்ட விடுதிகளிலிருந்து அகற்றப்பட்ட எனினும் சிறு பழுதுபார்த்தல்களின் பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடியதாக இருந்த 1000 இரும்பு கட்டில்கள், 80 இரும்பு அலுமாரிகள் மற்றும் 112 மரக் கதிரைகள் என்பவற்றை மீண்டும் பாவனைக்கு எடுப்பதற்குள்ள இயலுமை தொடர்பாக ஆராய்ந்து பார்க்காமல் மீளாய்வாண்டின் போது 436 மரத்திலான கட்டில்கள், 80 இரும்பு அலுமாரிகள் மற்றும் 112 மரக் கதிரைகள் என்பவற்றை புதிதாகக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 14,911,827 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் அந்த விடுதிகளில் காணப்பட்ட நல்ல நிலையிலுள்ள 191 இரும்புக் கட்டில்கள், 52 இரும்பு அலுமாரிகள் மற்றும் 77 உடுப்பு இராக்கைகள் என்பன ரூபா 291,100 தொகையில் உடைந்த பொருட்களாக ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 4.5 ஒப்பந்த செயற்பாடுகள்

03 ஆய்வுகூட உபகரணங்களைக் (Heating Mental) கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு நடைமுறைகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் உரிய உபகரணங்களுக்கு ISO சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்டு ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.8.9 ஆம் பந்தியின் பிரகாரம் சான்றிதழ்கள் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படாமை சிறு புறக்கணித்தலாக கருத முடியுமாகையால் உரிய கேள்விதாரரை விசாரித்து சான்றிதழின் பிரதியை வருவித்து கேள்வி மதிப்பீடு செய்யப்படாமல் அடுத்த கூடிய விலையில் அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 194,400 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 906,230 தொகையான மீதியொன்று 2012 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைத்த ரூபா 1,585,259 தொகையான ஆராய்ச்சி மானியம்

02 வருடங்கள் முதல் 03 வருடங்களுக்கிடையிலான காலமாக பயன்படுத்தப்படாது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.7 நிதியத்தின் குறைவான பயன்பாடு

வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் 2015 ஆம் ஆண்டு முழுவதும் ரூபா 1.2 மில்லியனுக்கு மேற்பட்ட சராசரி மீதியொன்று காணப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதனை பயன்படுத்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பல்கலைக்கழகத்தின் 05 பீடங்களிலும், தொலைக் கல்வி நிலையத்தினதும் செயற்பாடுகளை பரீட்சிப்பதற்காக நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு போதியளவான பதவிணயியினர் அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் சகல உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகவும் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | ஒப்பந்த நிர்வாகம் | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வேலை மற்றும் வழங்கல் தொடர்பாக ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் நாளதுவரையாக்கப்படாமை. |
| (இ) | வாகனங்கள் மீதான கட்டுப்பாடு | பல்கலைக்கழகத்தில் குழாம் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு மற்றும் ஓட்டக் குறிப்புக்களை பேணல் நாளதுவரையாக்கப்படாமை. |
| (ஈ) | ஆராய்ச்சிக் கட்டுப்பாடு | பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை. |